# உங்களை தடுத்து வைத்து இருக்கும் பொழுது உங்கள் உடைய உரிமைகளை ஞாபகம் வைத்து இருக்கவும்

இந்த அறிவித்தலில் உள்ள உரிமைகள் இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் சட்டத்தின் கீழ் உங்களுக்கு உத்தரவாதம் அளிக்கப் பட்டு உள்ளது. அத்துடன் EU Directive 2012/13 இன் கீழ் உள்ள குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளில் உள்ள தகவல் பெறுவதற்கான உரிமை இணங்கவும் இந்த உரிமைகள் உள்ளன.

> பொலிஸ் நிலையத்தில் உள்ள பொழுது உங்கள் உடைய உரிமைகள் இந்த பக்கத்தில் சுருக்கமாக தரப்பட்டு உள்ளது.
> மேலதிக தகவல் பத்திகள் 1 தொடக்கம் 11 வரை அடுத்த பக்கங்களில் உள்ளன.
>
> முழு விபரங்களும் பொலிஸ் நடைமுறைக் கோவை C. (Code of Practice C) இல் உள்ளன.

1. பொலிஸ் நிலையத்தில் உள்ள பொழுது உங்களுக்கு ஒரு சட்டத்தரணி உடைய உதவி தேவைப் பட்டால் பொலிஸ் இடம் அதனை அறியத் தரவும். இது இலவசம் ஆனது.
2. நீங்கள் எங்கே இருக்கின்றீர்கள் என யாருக்காவது தெரிவிக்க வேண்டி இருப்பின் பொலிஸ் இடம் அது பற்றி அறியத் தரவும். இது இலவசம் ஆனது.
3. உங்களுக்கு ஒழுங்கு விதிகளைப் பார்வை இட வேண்டி இருந்தால் அதனை பொலிஸ் இடம் அறியத் தரவும். - இவை நடை முறைக் கோவைகள் என அழைக்கப் படுகின்றன.
4. உங்களுக்கு மருத்துவ உதவி தேவைப் பட்டால் பொலிஸ் இடம் அறியத்தரவும். நீங்கள் சுகவீனமாக உணர்ந்தால் அல்லது காயம் அடைந்து இருந்தால் பொலிஸ் இடம் அறியத் தரவும். மருத்துவ உதவி ஆனது இலவசம் ஆனது ஆகும்.
5. ஒரு சந்தேகப் பட்ட குற்றம் தொடர்பாக உங்கள் இடம் கேள்விகள் கேட்கப் பட்டால் நீங்கள் பதில் அளிக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் கேள்வி கேட்கப்படும் பொழுது பதில் அளிக்காமல் விட்டு பின்னர் நீதி மன்றத்தில் ஏதாவது ஒன்றை குறிப்பிட்டு அதில் தங்கி இருந்தால் உங்கள் உடைய பிரதிவாதத்திற்கு பாதிப்பாக இருக்கலாம்.
6. பொலிஸ் நீங்கள் செய்து உள்ளீர்கள் என அவர்கள் நினைக்கும் குற்றம் தொடர்பாக உங்களுக்கு அறியத் தர வேண்டும். அத்துடன் ஏன் நீங்கள் கைது செய்யப் பட்டீர்கள் மற்றும் ஏன் தடுத்து வைக்கப் பட்டு உள்ளீர்கள் எனவும் உங்களுக்கு அறியத் தர வேண்டும்.
7. பொலிஸ் ஆனது உங்களுக்கு அல்லது உங்கள் உடைய சட்டத்தரணிக்கு ஏன் நீங்கள் கைது செய்யப்பட்டு உள்ளீர்கள் அத்துடன் ஏன் தடுத்து வைக்கப்பட்டு உள்ளீர்கள் மற்றும் நீங்கள் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டு இருந்த சமயம் என்பது தொடர்பான பதிவுகள் மற்றும் ஆவணங்களை பார்வை இடக் கேட்கலாம்.
8. உங்களுக்கு ஒரு மொழி பெயர்ப்பாளர் தேவைப் பட்டால் பொலிஸ் உங்களுக்கு ஒரு மொழி பெயர்ப்பாளரை ஒழுங்கு செய்து தர வேண்டும். நீங்கள் சில ஆவணங்களை மொழி பெயர்த்தும் பெற்றுக் கொள்ளலாம். இது இலவசம் ஆனது.
9. நீங்கள் பிரித்தானியராக இல்லாவிடில் அத்துடன் நீங்கள் உங்கள் உடைய தூதுவராலயத்தை அல்லது கொன்சுலெற்றை (consulate)

தொடர்பு கொள்ள விரும்பினால் அல்லது அவர்களுக்கு நீங்கள் தடுத்து வைக்கப்பட்டு உள்ளது தொடர்பாக அறியத் தர வேண்டி இருப்பின் அதனை பொலிசிற்கு அறியத் தரவும். இது இலவசம் ஆனது.

***10.*** பொலிஸ் ஆனது அவர்கள் உங்களை எவ்வளவு காலம் தடுத்து வைக்கலாம் என உங்களுக்கு அறியத் தர வேண்டும்.

***11.*** நீங்கள் குற்றம் இழைத்து அத்துடன் உங்கள் உடைய வழக்கு நீதி மன்றத்திற்கு சென்றால் உங்களுக்கோ அல்லது உங்கள் உடைய சட்டத்தரணிக்கு வழக்குத் தொடுநர் உடைய ஆதாரத்தை நீதி மன்ற விளக்கத்திற்கு முன்பாக பார்வை இட அதிகாரம் உண்டு.

| |
|---|
| உங்களுக்கு இந்த உரிமைகள் தொடர்பாக எதுவும் நிச்சயம் இல்லாமல் இருந்தால் பொலிஸ் தடுப்புக் காவல் அதிகாரி இடம் அதனைத் தெரிவிக்கவும். |

Home Office

Legal Aid Agency

The Law Society

| |
|---|
| இந்த சுருக்கத்தை தொடர்ந்து வரும் பக்கங்களில் எவ்வாறு பொலிஸ் உங்களை நடாத்த வேண்டும் மற்றும் எப்படி பாதுகாக்க வேண்டும் என மேலும் தகவல் தரப்பட்டு உள்ளது. அதனைப் பார்வை இடவும். |

உரிமைகள் மற்றும் உரிமைத்துவத்தை பற்றிய அறிவித்தல் தொடர்பான இந்த பதிவு ஆனது *1* ஆம் திகதி டிசம்பர் மாதம் *2018* இல் இருந்து அமலுக்கு வரும்.

தயவு செய்து இந்த தகவலை வைத்து இருப்பது உடன் எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக வாசிக்கவும். நீங்கள் பொலிஸ் நிலையத்தில் உள்ள பொழுது முடிவுகளை எடுக்க அது உதவியாக இருக்கும்.

## 1. உங்களுக்கு உதவி செய்ய ஒரு சட்டத்தரணியை பெறல்

- ஒரு சட்டத்தரணி (சொலிசிற்றர்) உங்களுக்கு உதவி செய்ய முடியும். அத்துடன் சட்டம் தொடர்பாக உங்களுக்கு ஆலோசனை வழங்க முடியும்.
- உங்கள் இடம் சட்டத்தரணி ஒருவர் உடன் பேசலாம் எனக் கேட்பது நீங்கள் ஒரு தவறைப் புரிந்தவர் என்று பார்க்கப்படும் என்ற அர்த்தம் இல்லை.
- பொலிஸ் தடுப்புக் காவல் அதிகாரி உங்களுக்கு சட்ட ஆலோசனை வேண்டுமா எனக் கேட்பது அவசியம். இது இலவசம் ஆனது.
- நீங்கள் பொலிஸ் நிலையத்தில் உள்ள பொழுது போலிஸ் ஆனது ஒரு சட்டத்தரணி இடம் பகலோ அல்லது இரவோ உங்களை பேச அனுமதிக்க வேண்டும்.
- நீங்கள் சட்ட ஆலாசனை கேட்டு இருந்தால் வழமையாக நீங்கள் ஒரு சட்டததரணி இடம் பேச சந்தர்ப்பம் கிடைக்கும் வரை பொலிஸ் ஆனது உங்கள் இடம் கேள்விகள் கேட்க அனுமதிக்கப்பட மாட்டாது. போலிஸ் உங்கள் இடம் கேள்விகள் கேட்கும் பொழுது நீங்கள் ஒரு சட்டத்தரணி உங்கள் உடன் அறையில் இருக்க அனுமதி கேட்கலாம்.
- நீங்கள் பொலிஸ் இடம் உங்களுக்கு சட்ட உதவி தேவை இல்லை என்று கூறி விட்டு பின்னர் மனம் மாறினால் அது பற்றி பொலிஸ் தடுப்புக் காவல் அதிகாரிக்கு அறிவிக்கவும். அவர் உங்களுக்கு ஒரு சட்டத்தரணியை தொடர்பு கொள்ள உதவி செய்து தருவார்.
- சட்டத்தரணி வருகை தராவிடிலோ அல்லது உங்களை பொலிஸ் நிலையத்தில் தொடர்பு கொள்ளாவிடிலோ அல்லது நீங்கள் ஒரு சட்டத்தரணி உடன் திரும்ப தொடர்பு கொள்ள வேண்டி இருந்தாலோ பொலிஸ் இடம் அவர் உடன் மறுபடி தொடர்பு கொள்ளும்படி கேட்கவும். .

### தீவிரம் குறைந்த குற்றங்கள் தொடர்பாக இலவச சட்ட ஆலோசனை

- தீவிரம் குறைந்த விடயங்கள் ஈடுபட்டு உள்ள சில வழக்குககளில் இலவச சட்ட ஆலோசனை ஆனது குற்றவியல் பிரதி வாத சேவையில் Criminal Defence Service (CDS) இருந்து நேரடியாக தகுதி வாய்ந்த ஆலோசகர்கள் இடம் இருந்து தொலை பேசி ஆலோசனையை பெற்றுக் கொள்ளலாம். சில மட்டுப்படுத்தப் பட்ட விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் சட்டத்தரணி பொலிஸ் நிலையத்திற்கு வருகை தர வேண்டும். அவையாவன:
  - ~ பொலிஸ் உங்கள் இடம் ஒரு குற்றம் தொடர்பாக கேள்விகள் கேட்க வேண்டி இருந்தால் அல்லது நேரடியாக கண்ணால் பார்த்த சாட்சியத்தை அடையாளப்படுத்தும் நடை முறையை செய்ய வேண்டி இருந்தால்
  - ~ உங்களுக்கு ஒரு பொருத்தமான வளர்ந்த ஆள் இடம் இருந்து உதவி தேவைப்பட்டால். “உதவி தேவைப் படும் ஆட்கள்” என்ற பகுதியைப் பார்க்கவும்.
  - ~ உங்களுக்கு தொலைபேசி மூலமாக தொடர்பு கொள்ள முடியாவிடில் அல்லது
  - ~ நீங்கள் மிகத் தீவிரமான தகாத நடத்தையில் ஈடுபட்டவர் என குற்றம் சாட்டப் பட்டு இருந்தால்.

CDS Direct **இடம் இருந்து இலவச ஆலோசனை தொலைபேசி ஆலோசனைக்கு மாத்திரம் மட்டுப் படுத்தப்பட்டு இருக்காவிடில்:**

நீங்கள் உங்களுக்கு தெரிந்த ஒரு சட்டத்தரணி உடன் பேச கேட்கலாம். அத்துடன் அவர்கள் சட்ட உதவி வேலை செய்பவர்களாக இருப்பின் நீங்கள் அந்த சட்ட உதவிக்கு எந்த பணமும் செலுத்த தேவை இல்லை. உங்களுக்கு ஒரு சட்டததரணியையும் தெரியாவிடில் அல்லது உங்களுக்கு தெரிந்த சட்டத்தரணியை தொடர்பு கொள்ள முடியாது இருந்தால் நீங்கள் கடமை சட்டத்தரணி உடன் பேசலாம். (Duty solicitor). இந்த சேவை இலவசம் ஆனது.

- கடமை சட்டத்தரணிக்கும் பொலிசிற்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லை.

**இலவச சட்ட ஆலோசனையை ஏற்பாடு செய்ய:**

- பொலிஸ் ஆனது பிரதிவாத சட்டத்தரணியினைத் தொடர்பு கொள்ளும் (Defence Solicitor Call Centre (DSCC). இந்த DSCC ஆனது சட்ட ஆலோசனை வழங்கப் பட ஏற்பாடு செய்யும் அது CDS Direct இடம் இருந்தோ அல்லது நீங்கள் கேட்ட சட்டத்தரணியாகவோ அல்லது கடமை சட்டத்தரணியாகவோ இருக்கலாம்.

- DSCC மற்றும் CDS Direct என்பன சுயாதீனமான சேவைகள். இவை இலவச சட்ட ஆலோசனை ஏற்பாடு செய்வது உடன் அவர்களுக்கும் பொலிசிற்கும் எந்த விதமான தொடர்பும் இல்லை.

**நீங்களாகவே உங்கள் உடைய சட்ட ஆலோசனைக்கு பணம் செலுத்த விரும்பினால்:**

- அனைத்து வழக்குகளிலும் உங்களுக்கு விரும்பினால் நீங்கள் சட்ட ஆலோசனைக்கு பணம் செலுத்த முடியும்.

- CDS Direct இடம் இருந்து இலவச சட்ட ஆலோசனை ஆனது தொலைபேசி ஆலோசனைக்கு மாத்திரம் மட்டுப் படுத்தப்பட்டு இருந்தாலும் நீங்கள் இன்னமும் உங்களுக்கு வேண்டும் எனில் விருப்பமான சட்டததரணி உடன் தொலை பேசியில் பேசலாம். ஆனால் அவர்களுககு அவர்கள் உடைய சேவைக்கு சட்ட உதவி மூலம் பணம் செலுத்தப்பட மாட்டாது. உங்களை பணம் செலுத்துமாறு கோரலாம். DSCC ஆனது உங்கள் உடைய சொந்த சட்டத்தரணியை உங்கள் சார்பில் தொடர்பு கொள்ளலாம்.

- நீங்கள் தெரிவு செய்த சட்டத்தரணி உடன் நீங்கள் தனிமையில் தொலை பேசி மூலம் கதைக்கலாம். அல்லது அவர்கள் உங்களை பொலிஸ் நிலையத்தில் வந்து பார்வை இட தீர்மானம் எடுக்கலாம்.

- நீங்கள் தெரிவு செய்த உங்களுக்கு விருப்பமான சட்டத்தரணி உடன் தொடர்பு கொள்ள முடியாவிடில் பொலிஸ் ஆனது இன்னமும் DSCC ஐ அழைத்து ஒரு இலவச சட்ட ஆலோசனைக்கு கடமை சட்டத்தரணி மூலம் ஏற்பாடு செய்யலாம்.

2. **யாருக்காவது நீங்கள் பொலிஸ் நிலையத்தில் உள்ளீர்கள் என்பதனை அறிவிப்பது**

- நீங்கள் பொலிஸ் இடம் யாரையாவது தொடர்பு கொள்ளக் கேட்கலாம். அதாவது நீங்கள் பொலிஸ் நிலையத்தில் உள்ளதை யாருக்காவது அறிவிக்கும்படி கேட்கலாம். இது இலவசம் ஆனது ஆகும்.
- அவர்கள் எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக தொடர்பு கொள்வார்கள்.

3. **நடை முறைக் கோவைகளை பார்வை இடல்**

- நடை முறைக் கோவை என்பது நீங்கள் பொலிஸ் நிலையத்தில் உள்ள பொழுது பொலிஸ் செய்யக்கூடிய மற்றும் செய்யக் கூடாதன பற்றிய ஒழுங்கு விதிகள் ஆகும். இந்த அறிவித்தலில் சுருக்கமாக குறிப்பிடப் பட்டு உள்ள உரிமைகளையும் உள் அடக்கும்.
- பொலிஸ் நடைமுறைக் கோவையினை வாசிக்க அனுமதி அளிக்கும். ஆனால் அதன் மூலம் நீங்கள் சட்டத்தை அத்து மீறி உள்ளீர்கள் என்பது தொடர்பான பொலிஸ் உடைய கண்டு பிடிப்பை அது தாமதப் படுத்தும் எனில் நீங்கள் அவ்வாறு செய்ய முடியாது.

- பொலிஸ் நடைமுறைக் கோவையினை நீங்கள் வாசிக்க விரும்பினால் அது பற்றி பொலிஸ் தடுப்புக் காவல் அதிகாரி இடம் தெரிவிக்கவும்.

## 4. நீங்கள் சுகம் இல்லாமல் இருந்தால் அல்லது காயப்பட்டு இருந்தால் மருத்துவ உதவி பெற்றுக் கொள்ளல்

- நீங்கள் சுகவீனமாக இருப்பதாக உணர்ந்தால் அல்லது மருந்து தேவைப் படின் அல்லது ஒரு காயம் ஏற்பட்டு இருந்தால் அது பற்றி பொலிஸ் இடம் அறியத் தரவும். அவர்கள் ஒரு வைத்தியர் அல்லது மருத்துவ தாதி அல்லது வேறு ஆரோக்கியம் தொடர்பான அதிகாரியை அழைப்பார்கள். இந்த சேவை இலவசம் ஆனது ஆகும்.
- நீங்கள் உங்கள் உடைய சொந்த மருந்தினை எடுக்க அனுமதி அளிக்கலாம். ஆனால் பொலிஸ் அதனை முதலில் சோதிக்க வேண்டும். ஒரு மருத்துவ தாதி வழமையாக உங்களைப் பார்ப்பார். ஆனால் உங்களுக்கு தேவையானால் பொலிஸ் ஒரு வைத்தியரை பார்வை இட ஏற்பாடு செய்வார்கள். நீங்கள் இன்னும் ஒரு வைத்தியரைர பார்வை இடக் கேட்கலாம். ஆனால் அதற்கு நீங்கள் பணம் செலுத்த வேண்டி இருக்கலாம்.

## 5. அமைதியாக இருப்பதற்கான உரிமை

சந்தேகிக்கப் பட்டு உள்ள குற்றம் தொடர்பாக உங்கள் இடம் கேள்வி கேட்டால் நீங்கள் அது தொடர்பாக எந்த விதமான பதிலும் அளிக்கத வேண்டிய அவசியம் இல்லை..

எவ்வாறு இருப்பினும் கேள்வி கேட்கப் படும் பொழுது பதில் அளிக்காமல் விட்டு பின்னர் நீதி மன்றத்தில் ஏதாவது ஒன்றை குறிப்பிட்டு அதில் தங்கி இருந்தால் அது உங்கள் உடைய பிரதி வாதத்திற்கு பாதிப்பாக இருக்கலாம்.

நீங்கள் கூறும் எதுவும் நீதி மன்றத்தில் சான்றாக வழங்கப் படலாம்.

## 6. நீங்கள் புரிந்ததாக உங்கள் மீது சந்தேகப் பட்ட குற்றம் தொடர்பாக அறிதல் மற்றும் ஏன் நீங்கள் கைது செய்யப் பட்டு தடுத்து வைக்கப்பட்டு உள்ளீர்கள் என்பது பற்றி அறிதல்

- பொலிஸ் ஆனது நீங்கள் எந்த வகையான குற்றம் புரிந்து உள்ளீர்கள் என தாங்கள் கருதுவதாக உங்களுக்கு அவசியம் அறிவிக்க வேண்டும். இதில் எப்பொழுது எங்கே இந்தக் குற்றம் புரியப் பட்டு உள்ளது என்பதும் உள் அடங்கும்.

- பொலிஸ் ஆனது ஏன் நீங்கள் எந்த வகையான குற்றம் புரிந்து உள்ளீர்கள் என தாங்கள் நினைக்கின்றார்கள் என மற்றும் ஏன் உங்களை கைது செய்ய வேண்டி இருந்தது என்பது பற்றியும் உங்களுக்கு அவசியம் அறியத் தர வேண்டும்..

- பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் ஆனது ஏன் நீங்கள் தடுத்து வைக்கப் பட வேண்டும் எனக் கூற வேண்டும்.

- ஏதாவது குற்றம் பற்றி உங்கள் இடம் ஏதாவது கேள்விகள் கேட்கப் பட முன்பு பொலிஸ் ஆனது உங்களுக்கும் உங்கள் உடைய சட்டத்தரணிக்கும் போதுமான அளவு தகவல் கொடுக்க வேண்டும். அதாவது நீங்கள் என்ன செய்து உள்ளீர்கள் என பொலிஸ் கருதுகின்றது அதன் மூலம் நீங்கள் உங்களுக்காக வாதம் செய்து கொள்ளலாம் ஆனால் பொலிஸ் விசாரணையை பாதிக்கும் நேரத்தில் அல்ல.

- நீங்கள் வேறு ஏதாவது குற்றங்கள் புரிந்து உள்ளீர்களா என பொலிஸ் கருதினாலும் அதற்கும் இது பிரயோகிக்கப்பட வேண்டும்.

## 7. உங்கள் உடைய கைது மற்றும் தடுத்து வைப்பு தொடர்பான ஆவணங்களைப் பார்வை இடல்

- நீங்கள் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப் பட்டு உள்ள பொழுது பொலிஸ் அவசியம்:

  ~ உங்கள் உடைய தடுப்புக் காவல் பதிவில் உங்களைக் கைது செய்ததிற்கான காரணத்தையும் ஏன் உங்களைத் தடுத்து வைக்க வேண்டும் என அவர்கள் கருதுகின்றார்கள் எனவும் பதிவு செய்ய வேண்டும்.

  ~ உங்கள் உடைய சட்டத்தரணியை இந்த பதிவுகளை பார்வை இட அனுமதிக்க வேண்டும். பொலிஸ் தடுப்புக் காவல் அதிகாரி இதனை ஒழுங்கு செய்வார்.

- வேறு ஏதாவது குற்றங்களை நீங்கள் புரிந்து உள்ளீர்களா என பொலிஸ் நினைத்தால் அதுற்கும் இது பொருத்தமாக இருக்கும்.

- பொலிஸ் ஆனது உங்கள் உடைய கைது மற்றும் தடுத்து வைப்பு தொடர்பாக திறமான முறையில் சட்ட பூர்வமாக வாதிடுவதற்கு தேவையான விடயங்களை உங்களையும் உங்கள் உடைய சட்டததரணியையும் ஆவணங்கள் மற்றும் அவசியமான விடயங்களை பார்வை இட அவசியம் அனுமதி அளிக்க வேண்டும்.

8. **ஒரு மொழி பெயர்ப்பாளரை பெற்றுக் கொள்ளல் மற்றும் சில ஆவணங்களை மொழி பெயர்ப்பு செய்வது உங்களுக்கு உதவி அளிக்க கூடும்.**

- உங்களுக்கு ஆங்கிலம் பேச முடியாவிடில் அல்லது விளங்கவிடில் பொலிஸ் ஆனது உங்கள் மொழி பேசும் ஒருவரை உங்களுக்கு உதவி செய்யும் முகமாக ஏற்பாடு செய்வார்கள். இது இலவசம் ஆனது.

- நீங்கள் செவிடாக இருந்தால் அல்லது பேசுவதில் ஏதாவது சிரமம் இருந்தால் பொலிஸ் ஆனது ஒரு பிரித்தானிய சைகை மொழி ஆங்கில் மொழி பெயர்ப்பாளரை உங்களுக்கு உதவி செய்ய பொலிஸ் ஏற்பாடு செய்யும். இது இலவசம் ஆனது.

- உங்களுக்கு ஆங்கிலம் பேச முடியாவிடில் அல்லது விளங்கவிடில், பொலிஸ் உங்களுக்கு ஒரு மொழி பெயர்ப்பாளரை ஒழுங்கு செய்து ஏன் உங்களை தடுத்து வைத்து உள்ளார்கள் என உங்களுககு அறியத் தருவார்கள். உங்களை தடுப்புக் காவலில் வைத்து இருக்க முடிவு எடுக்கும் ஒவ்வொரு தடவையும் இது செய்யப் பட வேண்டியது அவசியம் ஆகும்..

- உங்களைத் தடுத்து வைக்கும் ஒவ்வொரு முடிவிற்குப் பின்னும், அதன்பின் உங்களை ஏதேனும் ஒரு குற்றத்தின் பேரில் குற்றம் சாற்றியிருந்தாலும், நீங்கள் ஏன் தடுக்கப்பட்டு உள்ளீர்கள் எனவும், எந்தக் குற்றச் சாட்டின் பேரில் தடுக்கப்பட்டு இருக்கிறீர்கள் எனவும், அவ்வாறு தராமல் இருக்க தனிக் காரணங்கள் இருந்தாலொழிய, பொலிஸ் உங்கள் மொழியிலான ஆவணத்தில், அறியத் தரப்பட வேண்டும். அந்தக் காரணங்கள்:

  ~ என்ன நடக்கிறது என்றும், ஆவணம் இல்லாததனால் ஏற்படும் விளைவு களையும் நீங்கள் முழுமையாக அறிந்திருந்தாலும், உங்களைப் பாதுகாக்க உங்களுக்கு எந்த ஓர் ஆவணமும் தேவை இல்லை என நீங்கள் முடிவு செய்தால், முடிவு எடுப்பதில் உதவி செய்திட ஒரு சொலிசிற்றர் வேண்டும் எனக் கேட்க ஒரு சந்தர்ப்பம் உங்களுக்கு உண்டு. அதற்கான ஒப்புதலை நீங்கள் எழுதித் தர வேண்டும்.

  ~ எழுத்துப் பூர்வமான மொழிபெயர்ப்பிற்குப் பதிலாக வாய்மொழி மொழிபெயர்ப்பு அல்லது மொழிபெயர்ப்பாளர் வழியாக சுருக்கம், உங்களை நீங்கள் பாதுகாத்துக் கொள்ளவும், என்ன நடக்கிறது என முழுமையாகப் புரிந்து கொள்வதற்கும் போதுமானது எனில், பாதுகாப்பு அலுவலர் அதனை உறுதி செய்திட வேண்டும்.

- பொலிஸ் உங்களைக் கேள்விகள் கேட்கையில், அதனை ஒலிப்பதிவு செய்திடாமல் இருக்கும்போது, மொழி பெயர்ப்பாளர், கேள்விகளையும் அதற்கான உங்களின் பதில்களையும் உங்கள் மொழியில் பதிவு செய்வார். அது துல்லியமான பதிவு என்பதை, அதில் நீங்கள் கையெழுத்திடும் முன் சோதனை செய்து கொள்ளலாம்.

- நீங்கள் பொலிசுக்கு ஒரு வாக்குமூலத்தை அளிக்க விரும்பினால், மொழி பெயர்ப்பாளர் அந்த வாக்குமூலத்தினை நகலாக எடுத்து, நீங்கள் சோதனை செய்துவிட்டுச் சரியெனக் கையெழுத்திடக் கொடுப்பார்.

- இந்த அறிக்கையின் மொழிபெயர்ப்பினைப் பெறவும் உங்களுக்கு உரிமை உண்டு. மொழிபெயர்ப்பு கிடைக்கவில்லை என்றால், ஒரு மொழிபெயர்ப்பாளர் வழியாக

எந்தவிதத் தாமதமும் இன்றி, மொழிபெயர்ப்புரையாக உங்களுக்குத் தகவல்கள் தரப்பட வேண்டும்.

**9. உங்கள் உடைய தூதரகத்தினை அல்லது துணைத் தூதரகத்தினை தொடர்பு கொள்ளல்**

நீங்கள் பிரித்தானியராக இருக்காவிடில் நீங்கள் பொலிஸ் இடம் நீங்கள் ஏன் பொலிஸ் நிலையத்தில் உள்ளீர்கள் எங்கே உள்ளீர்கள் என அறிவிக்க உங்கள் உடைய உயர் ஸ்தானிகராயலத்தை தூதரகத்தை அலலது துணைத் தூதரகத்தை தொடர்பு கொள்ள வேண்டும் எனக் கேட்கலாம். அவர்கள் உங்களை தனிப் பட்ட முறையில் அல்லது ஒரு சொலிசிற்றரை ஒழுங்கு செய்து சந்திக்கலாம்.

**10. எவ்வளவு காலம் உங்களை தடுத்து வைத்து இருக்கலாம்.**

- உங்களை சாதாரணமாக 24 மணி நேரம் எந்த விதமான குற்றமும் சாட்டாமல் தடுத்து வைக்கலாம்.இந்தக் குற்றம் ஒரு நீதிபதி மற்றும் யூரி இனால் கிறவுன் நீதி மன்றத்தில் மற்றும் ஒரு பொலிஸ் சுப்பிரின்டன்ற் அல்லது நீதி மன்றம் விளக்க விசாரணை நடாத்த தயாராக இருந்தாலே இந்தக் காலம் கூடுதலாகவும் இருக்கலாம். 36 மணி நேரத்தின் பின்பு ஒரு நீதி மன்றம் மாத்திரமே பொலிசிற்கு உங்களை குற்றம் சாட்டாமல் மேலும் தடுத்து வைக்க அனுமதி அளிக்கலாம்.

- அடிக்கடி ஒவ்வொரு தடவையும் ஒரு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி உங்கள் வழக்கை பார்வை இட வேண்டும். அதாவது உங்களை இன்னமும் பொலிஸ் நிலையத்தில் வைத்து இருக்க வேண்டுமா என பார்ப்பதற்கு இதனைச் செய்ய வேண்டும். இது மீளாய்வு என அழைக்கப் படும். அத்துடன் அந்த அதிகாரி மீளாய்வு அதிகாரி என அழைக்கப் படுவார். நீங்கள் நலமாக இருக்காவிட்டால் ஒழிய இந்த தீர்மானம் பற்றி உங்களுக்கு எழுத்தில் அல்லது மீளாய்வு அதிகாரிக்கு நேரடியாக கூறுதல் அல்லது தொலைக் காட்சி இணைப்பு மூலமாக உங்கள் கருத்தை தெரிவிக்க உங்களுக்கு உரிமை உள்ளது. உங்கள் உடைய சட்டத்தரணிக்கும் உங்கள் சார்பில் இது தொடர்பாக கருத்து தெரிவிக்கஅதிகாரம் உள்ளது.

- மீளாய்வு அதிகாரி உங்களை விடுதலை செய்யா விடில் ஏன் எனவும் தடுப்புக் காவல் பதிவில் பதிவு செய்த காரணம் என்ன என்பதனையும் உங்களுக்கு அறியத் தர வேண்டும்.

- உங்கள் உடைய தடுப்புக் காவல் அவசியம் இல்லை எனில் நீங்கள் விடுவிக்கப் பட வேண்டும். பொலிஸ் ஆனது மேலும் தாங்கள் இந்த குற்றத்தினை விசாரணை செய்ய வேண்டும் என பொலிஸ் விரும்பினால் உங்களை பிணையில் அல்லது பிணை இல்லாமல விடுதலை செய்யலாம். உங்களை பிணில் விடுதலை செய்தால் உங்கள் இடம் எழுத்திலான அறிவித்தல் ஒன்றை தர வேண்டும். அதில் நீங்கள் மறுபடி பொலிஸ் நிலையத்திற்கு வரவேண்டும் என்றும் உங்கள் பிணை மீத ஏதாவது நிபந்தனைகள் இருந்தால் அவற்றையும் எழுத்தில் தர வேண்டும்.
- பொலிஸ் ஆனது உங்கள் உடைய தடுப்பை நீடீக்கும் படி நீதி மன்றம் இடம் எப்பொழுது கேட்கலாம்.

  ~ தொலைக் காட்சி மூலம் ஏற்பாடு செய்தால் ஒழிய உங்களை விளக்கத்திற்காக நீதிமன்றத்திற்கு கொண்டு செல்ல வேண்டும். அதன் மூலம் அவர்கள் உங்களை பார்க்கலாம் மற்றும் கேட்கலாம் அத்துடன்

நீதிமன்றத்தில் உள்ள ஆட்களை நீங்கள் பார்க்கலாம் அவர்கள் பேசுவதைக் கேட்கலாம்.

~ தடுப்புக் காவல் அதிகாரி பொருத்தமானது எனக் கருதினால் ஒழிய தொலைக் காட்சி மூலம் விசாரணை ஏற்பாடு செய்ய முடியாது. ஒரு சட்டத்தரணி அதனைப் பயன் படுத்துவது பற்றி உங்களுக்கு விளக்கம் தந்து ஆலோசனை இருப்பது உடன் உங்கள் உடைய சம்மதமும் பெற்றுக் கொள்ளப் படும்.

~ நீதி மன்றத்திற்கு ஏன் உங்களை பொலிஸ் தடுத்து வைக்க விரும்பு கின்றது என்பது பற்றியும் அதறகான சான்று தொடர்பான விபரங்கள் பற்றியும் உங்களுக்கு ஒரு பிரதி வழங்கப் பட வேண்டும்.

~ உங்கள் உடைய நீதி மன்ற விளக்கத்திற்கு ஒரு சட்டத்தரணியை வைத்துக் கொள்ள உங்களுக்கு உரிமை உள்ளது.

~ நீதி மன்றம் ஆனது தேவை எனின் பொலிஸ் உங்கள் உடைய வழக்கை மிக அவதானமாக விசாரிக்க வேண்டும் எனக் கருதினால் மற்றும் நேரத்தை வீணாக்காமல் செய்ய வேண்டும் எனக் கருதினால் மட்டும் பொலிஸ் உங்களை தடுப்புக் காவலில் வைத்து இருக்க அனுமதி அளிக்க முடியும்.

- பொலிசிற்கு உங்களை நீதி மன்றத்திற்கு அனுப்ப போதுமான அளவு சான்று இருந்தால் நீங்கள் பொலிஸ் நிலையத்தில் அல்லது தபால் மூலம் குற்றம் சாட்டப் படலாம் உங்களை நீதி மன்றத்தில் சமூகம் அளித்து விளக்க விசாரணைக்கு உட் பட வேண்டும் எனக் குறிப்பிட வேண்டும்.

## *11.* உங்கள் உடைய வழக்கு நீதி மன்றத்திற்கு சென்றால் சான்றினை பார்வை இடும் வாய்ப்பு

- நீங்கள் குற்றம் செய்தது என குற்றம் சாட்டப் பட்டால் நீங்களும் உங்கள் உடைய சட்டத்தரணியும் உங்களுக்கு எதிராக உள்ள சான்றினை பார்வை இட அனுமதிக்க வேண்டும். அத்துடன் ஏதாவது சான்று உங்கள் உடைய பிரதி வாதத்திற்கு உதவியாக இருக்கும் ஆயின் அத்தகைய சான்றும் பார்வை இட அனுமதிக்கப் பட வேண்டும். இது நீதி மன்ற விளக்கம் ஆரம்பம் ஆக முன்னர் செய்யப் பட வேண்டும். பொலிசும் அரச வழக்கு தொடுநர் சேவையும் இதனை ஒழுங்கு செய்ய வேண்டும். அத்தடன் பொருத்தமான ஆவணங்கள் மற்றும் விடயங்களை பர்ர்ப்பதற்கு ஏற்பாடு செய்து கொடுக்கப் பட வேண்டும்.

## பொலிஸ் நிலையத்தில் உள்ள பொழுது தெரிய வேண்டிய ஏனைய விடயங்கள்

### எவ்வாறு நீங்கள் நடாத்தப் பட வேண்டும் மற்றும் பராமரிக்கப் பட வேண்டும்

இந்த குறிப்புகள் நீங்கள் பொலிஸ் நிலையத்தில் வைத்து இருக்கப் படும் பொழுது எதை எதிர்பார்க்கலாம் எனக் குறிப்பிடுகின்றது. மேலும் தகவல்கள் அறிவதற்கு நடை முறைக் கோவையை பார்வை இடவும். ஒவ்வொரு விடயத்தைப் பற்றியும் மேலதிக தகவல்களை கண்டு பிடிப்பது எங்கே என்று ஒரு பட்டியலில் உள் அடக்கப் பட்டு உள்ளது. உங்களுக்கு ஏதாவது கேள்விகள் இருந்தால் தடுப்புக் காவல் பொலிஸ் .அதிகாரி இடம் கேட்கவும்.

### ஆட்களுக்கு உதவி தேவைப் பட்டால்

- நீங்கள் *18* வயதிலும் குறைந்தவராக காணப் பட்டால் அல்லது இலகுவாக பாதிப்பிற்கு உள்ளாக்கப் படக் கூடியவராக இருந்தால் உதாரணமாக கற்கையில் குறைபாடுகள் அல்லது மன நிலை தொடர்பான பிரச்சனைகள் இருந்தால். சில விடயங்களை செய்வதற்கு நீங்கள் கூடவே ஒரு ஆளை வைத்து இருக்கும் உரிமை உள்ளது. இந்த ஆள் ''பொருத்தமான ஒரு வளர்ந்த ஆள்'' (''appropriate adult") என அழைக்கப் படுவார். அவர்களுக்கும் இந்த அறிவித்தலின் ஒரு பிரதி வழங்கப்படும்.

    - உங்கள் உடைய பொருத்தமான வளர்ந்த ஆள் என்ன நடந்து கொண்டு உள்ளது என உங்களுக்கு விளங்கப் படுத்தவும் மற்றும் உங்கள் உடைய அக்கறைகளை பாதுகாக்கவும் உதவி செய்வார். போலிஸ் உங்கள் உரிமைகள் பற்றி குறிப்பிடும் பொழுது மற்றும் ஏன் நீங்கள் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப் பட்டு உள்ளீர்கள் என விளங்கப் படுத்தும் பொழுது அவர் அல்லது அவ உங்கள் உடன் கூட இருக்க வேண்டும். அவர் அல்லது அவ பொலிஸ் உங்களுக்கு பொலிஸ் எச்சரிக்கை வாசிக்கும் பொழுதும் உங்கள் உடன் கூட இருக்க வேண்டும்.

    - உங்கள் உடைய பொருத்தமான வளர்ந்த ஆள் உங்கள் உடைய சார்பில் ஒரு சட்டத்தரணியையும் கேட்கலாம்.

    - நீங்கள் விருப்பம் ஆயின் பொருத்தமான வளர்ந்த ஆள் உங்கள் உடைய அறையில இல்லாமல் சட்டத்தரணி உடன் தனியே பேச முடியும்.

~ நீஙகள் பொலிஸ் நிலையத்தில் உள்ள பொழுது பின்வரும் பட்டியலில் உள்ள ஒரு சில விடயங்களை செய்ய வேண்டி இருக்கலாம். பொலிஸ் பின் வரும் விடயங்களைச் செய்யும் பொழுது வேறு ஏதாவது விசேட காரணங்கள் இருந்தால் ஒழிய பொருத்தமான வளர்ந்த ஆள் சமூகம் அளித்து இருக்க வேண்டும். :

~ உங்களை நேர் முகம் காண்பது அல்லது உங்களை எழுத்திலான அறிக்கை அல்லது பொலிஸ் குறிப்புகளில் கையொப்பம் வைக்கும் படி கேட:டுக் கொள்ளல்.

~ உங்களை உடல் சோதனை செய்வதற்காக உங்கள் உடைய வெளி ஆடைகளை தவிர மேலும் ஆடைகளை அகற்றச் சொல்வது.

~ உங்கள் உடைய விரல் அடையாளங்களை, படத்தை அல்லது டிஎன்ஏ (DNA) அல்லது வேறு மாதிரியை எடுத்தல்.

~ சாட்சி அடையாளப் படுத்தும் நடை முறை தொடர்பாக வேறு ஏதாவது விடயங்களை செய்தல்.

- உங்கள் உடைய பொருத்தமான வளர்ந்த ஆள் தானாக நேரடியாக சமூகம் அளிக்க சந்தர்ப்பம் கொடுக்கப் பட வேண்டும். அல்லது பொலிஸ் உங்கள் வழக்கை மீளாய்வு செய்யும் பொழுது நீங்கள் தொடர்ந்தும் தடுத்து வைக்கப் பட வேண்டுமா என தீர்மானிக்கும் பொழுது நீங்கள் தொலை பேசி மூலம் உதவி செய்யலாம்.

- உங்கள் உடைய பொருத்தமான வளர்ந்த ஆள் இருந்தால், பொலிஸ் உங்களை ஒரு குற்றம் செய்தது என்று சாட்டும் பொழுது அவர் அங்கு சமூகமாக இருக்க வேண்டும்.

**நீங்கள் பொலிஸ் நிலையத்தில் இருந்த பொழுது அந்த நேரம் தொடர்பான விபரங்கள்**

நீங்கள் பொலிஸ் நிலையத்தில் இருந்த பொழுது இடம் பெற்ற சம்பவங்கள் அனைத்தும் பதிவு செய்யப் பட்டு இருக்கும். இது தடுப்புக் காவல் பதிவு (Custody Record) என அழைக்கப்படுகின்றது.

- நீங்கள் பொலிஸ் நிலையத்தை விட்டுச் செல்லும் பொழுது நீங்கள்ஈ உங்கள் உடைய சட்டத்தரணி அல்லது பொருத்தமான ஆள் உங்கள் உடைய தடுப்புக் காவல் பதிவின் ஒரு பிரதியைக் கேட்கலாம். பொலிஸ் ஆனது எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக உங்களுக்கு தடுப்புக் காவல் பதிவின் ஒரு பிரதியை அவசியம் உங்களுக்குத் தர வேண்டும்.

- நீங்கள் பொலிஸ் நிலையத்தை விட்டு வெளியேறிய பின்பு 12 மாத காலம் வரை பொலிஸ் இடம் உங்கள் தடுப்புக் காவல் பதிவு பிரதியை கேட்கலாம்.

**தொடர்பு வைத்துக் கொள்ளல்**

- ஒரு சட்டத்தரணி உடன் கதைப்பது மற்றும் உங்கள் உடைய கைது தொடர்பாக ஒருவருக்கு அறிவிப்பது தொடர்பாக வழமையாக உங்களுக்கு ஒரு தொலைபேசி அழைப்புக்கு அனுமதி அளிக்கப்படும்.

- பொலிஸ் இடம் நீங்கள் ஒரு தொலைபேசி அழைப்பை விடுக்க விரும்பினால் கேட்கலாம்.

- நீங்கள் ஒரு பேனாவும் பேப்பரும் கூட கேட்கலாம்.

- உங்களை பார்வை இட பார்வையாளர்கள் வருகை தரக் கூடியதாக இருக்கலாம். ஆனால் தடுப்புக் காவல் அதிகாரி அதனை அனுமதிக்க மறுக்கலாம்.

**உங்கள் உடைய சிறை அறை**

- சாத்தியமாக இருப்பின் நீங்கள் உங்களுக்கு தனியே ஒரு சிறை அறையில் வைத்து இருக்கப் படுவீர்கள்.

- அது துப்பரவாகவும் சூடாகவும் வெளிச்சம் உடையதாகவும் இருக்க வேண்டும்.

- உங்கள் உடைய படுக்கையை துப்பரவாகவும் ஒழுங்காகவும் வைத்து இருக்க வேண்டும்..

- உங்களுக்கு ஒரு மல சல கூடத்தை பாவிக்கவும் கழுவவும் அனுமதி கொடுக்கப்பட வேண்டும்.

**ஆடைகள்**

உங்கள் உடைய சொந்த ஆடைகள் உங்கள் இடம் இருந்து எடுக்கப் பட்டு விட்டால் பொலிஸ் உங்களுக்கு மாற்றீடாக வேறு ஆடை அணிய வழங்க வேண்டும்.

**உணவு பானம்**

உங்களுக்கு 3 தடவை உணவு அருந்துவதற்கு பானங்கள் உடன் வழங்கப் பட வேண்டும். வேண்டும் எனில் நீங்கள் சாப்பாட்டுக்கு இடையே பானம் அருந்தலாம்.

**உடற் பயிற்சி**

சாத்தியம் ஆயின் ஒவ்வொரு நாளும் வெளியே சுத்தமான காற்றை சுவாசிக்க அனுமதிக்க வேண்டும்.

**பொலிஸ் உங்கள் இடம் கேள்வி கேட்கும் பொழுது**

- அறை ஆனது துப்பரவாகவும் சூடாகவும் வெளிச்சமாகவும் இருக்க வேண்டும்.

- நீங்கள் எழுந்து நிற்க வேண்டிய நிலை ஏற்படக் கூடாது.

- போலிஸ் அதிகாரிகள் தங்கள் உடைய பெயர்களையும் மற்றும் பதவிகளையும் கூற வேண்டும்.
- உங்களுக்கு வழமையாக சாப்பாட்டு ரேநத்தின் பொழுது இடை வேளை வழங்கப்படுவது உடன் அதன் பின்புஏதாவது பானம் அருந்துவதற்கு இரண்டு மணித்தியாலங்களின் பின்பு ஒரு இடை வேளை வழங்கப் பட வேண்டும்.
- 24 மணி நேரம் உங்களை தடுப்புக் காவலில் வைத்து இருக்கும் பொழுது ஆக குறைந்தது 8 மணி நேரம் ஓய்வு எடுக்க அனுமதிக்க வேண்டும்.

**மத நம்பிக்கை தொடர்பான தேவைகள்**

நீங்கள் பொலிஸ் நிலையத்தில் உள்ள பொழுது உங்கள் உடைய மத வழி பாட்டை செய்வதற்கு ஏதாவது உதவி தேவைப் பட்டால் பொலிஸ் இடம் அதனை அறியத் தரவும். தேவைப் படின் அவர்கள் மத வழி பாட்டு புத்தகங்கள் மற்றும் ஏனைய பொருட்களை வழங்கலாம்.

### சாதாரண ஒழுங்கு விதிகள் வித்தியாசமானவையாக இருந்த சமயங்கள்

### உங்களுக்கு உதவி செய்ய ஒரு சட்டத்தரணியை பெற்றுக் கொள்ளல்

சில விசேட தருணங்களில் நீங்கள் ஒரு சட்டததரணி உடன் பேச முதல் பொலிஸ் அவசரமாக உங்கள் இடம் கேள்வி கேட்க வேண்டி இருக்கலாம். இந்த விசேட தருணங்கள் பொலிஸ் உடைய நடைமுறைக் கோவையில் தரப் பட்டு உள்ளது. நீங்கள் பொலிஸ் நிலையத்தில் உள்ள பொழுது பொலிஸ் என்ன செய்யலாம் அல்லது என்ன செய்யக் கூடாது என்பது பற்றி அவற்றில் தெளிவாக குறிப்பிடப்பட்டு உள்ளது. நீங்கள் மேலும் விபரங்கள் பார்க்க வேண்டி இருப்பின் அவை நடை முறைக் கோவையின் பத்தி 6.6 கோவை C இல் பார்வை இடலாம். (paragraph 6.6 of Code C of the Codes of Practice).

ஒரு விசேட சமயத்தில் பொலிஸ் ஆனது நீங்கள் தெரிவு செய்த சட்டத்தரணி உடன் பேச அனுமதிக்க மாட்டாது. இது இடம் பெற்றால் நீங்கள் இன்னும் ஒரு சட்டத்தரணியை தெரிவு செய்ய அனுமதி அளிக்க வேண்டும். உங்களுக்கு மேலும் விபரங்கள் தேவைப் பட்டால் அவற்றினை Annex B நடை முறைக் கோவையின் கோவை C இல் பார்வை இடலாம். (Annex B of Code C of the Codes of Practice)

### நீங்கள் பொலிஸ் நிலையத்தில் உள்ளீர்கள் என யாருக்காவது தெரியப்படுத்தல்

சில விசேட சமயங்களில் பொலிஸ் ஆனது எவரையும் தொடர்பு கொள்ள உங்களை அனுமதிக்காது. சில விசேட சமயங்களில் பொலிஸ் ஆனது உங்களை எவரையும் தொடர்பு கொள்ள அனுமதிக்க மாட்டாது. இந்த விசேட சமயங்கள் பற்றிய தகவல் நடைமுறைக் கோவையில் தரப் பட்டு உள்ளது. இது பற்றி மேலும் விபரங்கள் அறிய விரும்பினால் அவை அனெக்ஸ் டீ அல்லது நடை முறைக கோவையின் கோவை C இல் உள்ளது. (Annex B of Code C of the Codes of Practice)

### குடித்து விட்டு போதையில் மற்றும் போதை மருந்து எடுத்த பின்பு வாகனம் ஓட்டுதல் தொடர்பான குற்றங்கள்

குடித்து விட்டு போதையில் அல்லது போதை மருந்து எடுத்த பின்பு வாகனம் ஓட்டுதல் தொடர்பான குற்றங்கள் சம்பந்தமாக கைது செய்யப் பட்டால் உங்களுக்கு ஒரு சட்டத்தரணி உடன் பேசுவதற்கு அனுமதி உள்ளது. நீங்கள் இன்னமும் ஒரு சட்டத்தரணி உடன் பேச முடியாமல் இருந்தாலும் நீங்கள் உங்கள் உடைய சுவாச மாதிரி கொடுக்க மறுக்கலாம் இரத்தம் அல்லது சிறுநீர் மாதிரி கொடுக்க மறுக்கலாம் என்பது இதன் அர்த்தம் அல்ல.

### மன நலச் சட்டம் 1983 இன் கீழான தடுப்பு

பொலிஸ் ஆனது மன நல சட்டத்தின் கீழ் உங்களை மதிப்பீடு செய்வதற்கு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்க முடியும். நீங்கள் 18 வயதிலும் கூடியவராக இருந்தால் அத்துடன் உங்கள் உடைய நடத்தையின் காரணமாக மற்றவர்களுக்கு பார தூரமான காயம் அல்லது இறப்பு ஏற்படும் என எண்ணினால் நீங்கள் வேறு எங்காவது நியாயமாக தடுத்து வைக்கப் படலாம் என கருதப் பட மாட்டாது. உங்களை மன நல சட்டத்தின கீழ் தடுத்து வைத்தால் நீங்கள் ஒரு குற்றத்திற்காக தடுத்து வைக்கப் பட்டு உள்ளீர்கள் எனபது அர்த்தம் இல்லை.

இதன் அர்த்தம் என்ன வெனில் பொலிஸ் ஆனது உங்களை ஒரு வைத்தியர் பார்வை இட ஏற்பாடு செய்ய வேண்டும். அத்துடன் அங்கீகரிக்கப் பட்ட தகுதி உடைய மன நல உத்தியோகத்தர் மதிப்பீட்டை செய்ய வேண்டும். நீங்கள் வருகை தந்து 24 மணி நேரத்திற்குள் மதிப்பீடு செய்யப் பட வேண்டும். அல்லது பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப் பட்டு இருக்கும் பொழுது ஆனால் பொலிஸ் அவர்களுக்கு இயன்ற வரை விரைவாக ஒழுங்கு செய்ய வேண்டும். ஒரு பொலிஸ் நிலையத்தில் மதிப்பீடு செய்வதற்கான 24 மணி நேர தடுப்புக் காவல் ஆனது ஒரு வைத்தியர் அவசியம் எனக் கருதினால் ஒரு உயர் சிரேஸ்ட பொலிஸ் அதிகாரி இன் அனுமதி உடன் மேலும் 12 மணித்தியாலங்களினால் நீடிக்கப் படலாம். இந்த நேரத்தின் பொழுது பொலிஸ் ஆனது உங்களை ஒரு மிகவும் பொருத்தமான இடத்திற்கு மதிப்பீடு செய்யும் முகமாக மாற்றம் செய்யலாம்.

நீங்கள் மதிப்பீடு செய்ய காத்துக் கொண்டு இருக்கும் பொழுது பொலிஸ் ஆனது ஒரு அங்கீகரிக்கப் பட்ட ஆரோக்கிய நல பயிற்சியாளர் இனால் (Approved Healthcare Practitioner) பார்வை இடப் பட ஒழுங்கு செய்யலாம். அவர்கள் ஒரு மதிப்பீட்டினை செய்ய முடியாது. ஆனால் அவர்கள் வேறு ஏதாவது உங்களுக்கு இருக்க கூடிய வேறு ஏதாவது ஆரோக்கிய அக்கறைகள் தொடர்பாக உதவி செய்யலாம். அத்துடன் மதிப்பிட என்றால் என்ன என உங்களுக்கு விளங்கப் படுத்த உதவி செய்ய முடியும்.

### சுயாதீனமான தடுப்புக் காவல் பார்வையாளர்

சமூகத்தில் உள்ள சில அங்கத்துவர்கள் பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்காமல் செல்வதற்கு அனுமதி உள்ளது. இவர்கள் சுயாதீனமான தடுப்புக் காவல் பார்வையாளர்கள் (independent custody visitors) என அழைக்கப் படுவர். அத்துடன் அவர்கள் தன்னார்வ அடிப்படையில் வேலை செய்வது உடன் தடுத்து வைக்கப்படுபவர்கள் நல்ல முறையில் நடாத்தப் படுகின்றார்கள் என்பதையும் அவர்களுக்கு உரிய உரிமைகளை அவர்கள் நாட வசதி உண்டு என்பதையும் உறுதிப் படுத்திக்கொள்வர்ாகள்.

உங்களுக்கு ஒரு சுயாதீனமான தடுப்புக் காவல் அதிகாரியை பார்வை இடும் உரிமையோ அல்லது அவர்களை உங்களைப் பார்வை இடச் சொல்லும் உரிமையோ இல்லை. ஆனால் ஒரு பார்வையாளர் உங்களைப் பார்வை இடக் கேட்கலாம். ஒரு

சுயாதீனமான தடுப்புக் காவல் பார்வையாளர் நீங்கள் தடுப்புக் காவலில் இருக்கும் பொழுது விஜயம் செய்தால் அவர்கள் சுயாதீனமாக செயற் படுவார்கள். அவர்கள் அங்கு விஜயம் செய்வது உங்கள் உடைய நலன் புரி விடயங்கள் மற்றும் உரிமைகள் பாதுகாக்கப் பட்டனவா என சோதிப்பதற்கே ஆகும். எவ்வாறு இருப்பினும் உங்களுக்கு பேச விருப்பம் இல்லாவிடில் நீங்கள் பேச வேண்டிய அவசியம் இல்லை.

**எவ்வாறு ஒரு முறைப்பாட்டை ஏற்படுத்துவது**

உங்களை நடாத்திய விதம் தொடர்பாக நீங்கள் முறைப்பாடு செய்ய விரும்பினால் இன்ஸ்பெக்டராக உள்ள ஒரு பொலிஸ் அதிகாரி அல்லது உயர் பதவியில் உள்ள அதிகாரி இடம் பேசக் கேட்கவும். உங்களை விடுதலை செய்த பின்பும் நீங்கள் எந்த ஒரு பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்யலாம். போலிஸ் நடத்தை தொடர்பான சுயாதீன அலுவலகத்திற்கு (Independent Office for Police Conduct (IOPC) அல்லது ஒரு சட்டத்தரணி மூலம் அல்லது உங்கள் சார்பில் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் (MP)) மூலம் முறைப்பாடு செய்ய முடியும்.